கழக வெளியீடு : ௧௧௬௫

அயல்நாட்டுக் கதைக்கொத்து

[ஆறு புத்தகங்கள்]

*

ஆசிரியர் :

என் கே வேலன், பி.ஏ.

*

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை–1. மதுரை–1. திருநெல்வேலி–6.
1969

என் குழந்தை வேலன் (1907)

© 1968 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed I Mar 1964
Reprint : Mar 1969

P31,J9(5)
w3K9

AYALNATTUK KATHAIK KOTTU

Appar Achakam, Madras-1. (0-5)

பதிப்புரை

சிறுவர்களின் சிந்தைக்குக் களிப்பூட்டுவதும் அறிவார்வத்தை வளர்ப்பதும் கதைகளின் இயல்பாகும். எனவேதான் எந் நாட்டிலும் கதைநூல்கள் பல தோன்றலாயின.

இத்தகைய பயனுள்ள கதைநூல்கள் பலவற்றையும் பயின்று நம் நாட்டுச் சிருர் அறிவு பெற வேண்டுமானல் பிறநாட்டுக் கதைகளையும் தமிழில் ஆக்கித் தருதல் வேண்டும்.

இந்நோக்கத்தோடு சிறுகதைகள் ஒருங்கு திரட்டப் பட்டு அயல்நாட்டுக் கதைக்கொத்து என்ற பெயரில் வெளியிடப் பட்டுள்ளன. தனித்தனிச் சிறுகதை நூல் களைவிட இத்தகைய தொகுப்பு நூல்கள் படிப்பதற்கு வசதியானவை யாகும். ஆசிரியர்களும் பெற்ருேர்களும் இதனை ஆதரித்துச் சிறுவர் உலகம் அறிவு நலம் பெற உதவுவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

கதைகள்	புத்தகம்	பக்கம்
சங்கரனும் கங்கையும்	1	1
மயில் அரசன்	,,	18
இடையன் கண்ட கனவு	2	1
அரக்கனும் அரசியும்	,,	9
அழகியின் ஆசை	,,	24
நல்ல பையன்	3	1
நரியும் வாத்துக்களும்	,,	12
ஓடும் தோசை	,,	19
காட்டில் கட்டிய வீடு	,,	25
கரடி அரசன்	4	1
பெரிய பெருமாள்	,,	12
ஒளிவட்டம்	,,	12
சிரிக்கும் பொம்மை	5	1
மரம் கொத்திக் குருவி	,,	7
பாம்பும் வேடனும்	,,	13
பனிக்கட்டி மனிதன்	,,	22
கொல்லா விரதம்	6	1
நல்ல மருந்து	,,	9
தோட்டக்காரன்	,,	16
நீர்முத்துமாலை	,,	26

கழக வெளியீடு, ககஉ௲

[முதற் புத்தகம்]

ஆசிரியர்:
N K வேலன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1963

என். குழந்தைவேலன் (1907)

© 1963 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 May 1963

P31,J9(5)
w3K3.1

AYAL NATTUK KATHAIKAL - I

Appar Achakam, Madras-1.

பதிப்புரை

அயல்நாட்டுக் கதைகள் என்னும் கழகச் சிறுகதை வரிசையில் இது முதற் புத்தகமாகும். இளைஞர்க்கேற்ற இனிய கதைகள் பலவற்றை எழுதியுதவிய திரு. என். கே. வேலன் அவர்களே இச் சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

கழகவழி வெளிவந்துள்ள பிற கதை நூல்களைப் போலவே இதனையும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் வாங்கிச் சிறுவர்கள் படித்து மகிழுமாறு செய்வார்களென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பக்கம்

1. சங்கரனும் கங்கையும் 1

2. மயில் அரசன் 18

சங்கரனும் கங்கையும்

முன் ஒரு காலத்தில் ஓர் அரசனும் அரசியும் இருந்தனர். தங்களுக்குக் குழந்தை இல்லையே என்று அவர்கள் கவலைப்பட்டனர். ஒரு வனதேவதையிடம் சென்று பிள்ளைவரம் கேட்டனர்.

'குழந்தை எதற்கு? குழந்தைகளால் என்ன பயன்? குழந்தைகளால் உங்களுக்குத் தொல்லைதான் ஏற்படும்' என்று வனதேவதை கூறிற்று.

அரசி கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டாள். அரசன் குழந்தைகளின் அருமையைப் பற்றி அந்தத் தேவதையிடம் எடுத்துக்

கூறினன். அந்த முரட்டுத்தேவதைக்கு எரிச்சல் உண்டாயிற்று. ஒரே நாளில் ஏழு ஆண் குழந்தைகளைக் கொண்டு வந்து அரண்மனையில் சேர்த்தது.

'நமக்கு இத்தனை குழந்தைகள் வேண்டுமா'? என்று அரசி சற்றுத் தயங்கினள்.

தேவதைக்குக் கோபம் வந்தது. 'நீதானே குழந்தைகள் வேண்டும் என்ருய். குழந்தைகள் வந்துவிட்டன. வேண்டுமானல் அதை இரண்டுமடங்கு ஆக்கிவிடுகிறேன்' என்ருள். இன்னும் ஏழு ஆண் குழந்தைகள் வந்து சேர்ந்தன.

குழந்தைகள் எல்லாம் சேர்ந்து குதிஆட்டம் போட்டன. ஒரே கூச்சல். அரசியால் பதினன்கு குழந்தைகளையும் ஒன்ருக வைத்துப் பார்த்துக்கொள்ள முடியவில்லை. அவளுக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது.

குழந்தைகள் வளர்ந்து ஓடிவிளையாடின. அவர்களை அடக்கி வைக்க

அரசியால் முடியவில்லை. அரண்மனை வாசலுக்கு அப்பாலும் சென்று விளையாடத் தொடங்கின. அரண்மனையிலிருக்கும் குழந்தைகள் குடிசையில் இருக்கும் குழந்தைகளுடன் போய் விளையாடிக் கொண்டு இருந்தன.

கடைசி இளவரசனுடைய பெயர் சங்கரன். அரண்மனையின் அருகில் ஓர் ஏழைக் குடியானவன் வசித்து வந்தான். குடியானவனுடைய மகள் கங்கை மிகவும் அழகாக இருந்தாள். சங்கரன் கங்கையுடன் விளையாடுவது வழக்கம்.

குடியானவனுக்கு வயதாகி விட்டது. மகளுக்குத் திருமணம் செய்து விடவேண்டும் என்று முடிவு செய்தான். ஒருநாள் அவனிடம் ஒரு நல்ல தேவதை வந்தது.

'ஏன் வருத்தமாக இருக்கிறாய்?' என்று கேட்டது.

'எனக்கு வயதாகிவிட்டது. உடம்பும் சரி இல்லை. நான் இறந்து போய் விட்டால் என் மகளுக்கு யாரும்

துணை இல்லை. என்ன செய்வது?' என்று வருந்தினான்.

'என்னிடம் ஒப்பித்து விடு, நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று தேவதை கூறிற்று.

மறுநாள் குடியானவன் கங்கைக்குப் புதிய பாவாடை சட்டை வாங்கிக் கொடுத்தான். அவளைத் தேவதையிடம் அழைத்துச் சென்றான்.

தேவதை கங்கையை அன்புடன் வரவேற்றது. கங்கை தேவதையின் வீட்டில் வளர்ந்து வந்தாள். மிகவும் இன்பமாகக் காலம் கழித்து வந்தாள். சில நாட்களில் அவளுடைய தந்தையும் இறந்து விட்டார். கங்கை வளர்ந்து பெரிய பெண் ஆனாள்.

அரண்மனையிலிருந்த இளவரசர்கள் பெரியவர்கள் ஆனபிறகு ஒவ்வொருவராக அரண்மனையை விட்டு வெளியேறினர். சிலர் பணம் தேடுவதற்குக் கடல் கடந்து சென்றனர். இன்னும் சிலர் சிறிய ஊர்களைப் பிடித்து அரசாட்சி செய்தனர். மற்றும் சிலர்

அயல் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள இளவரசிகளை மணம் செய்து கொண்டனர். கடைசிமகன் சங்கரன் மட்டும் அரண்மனையிலேயே இருந்தான்.

ஒருநாள் கெட்ட தேவதை ஒன்று அரண்மனைக்கு வந்தது. அரசனும் அரசியும் சங்கரனிடம் கொஞ்சி விளையாடிக்கொண்டு இருந்தனர்.

'இன்னுமா கொஞ்ச வேண்டும். அவன் சிறிய குழந்தையா? ஊரெல்லாம் சுற்றிப்பார்த்தால் அவனுக்குக் கொஞ்சம் அறிவு வளரும்' என்று தேவதை சொல்லிற்று.

'அவனை எப்படித் தனியாக அனுப்புவது? அவனுக்குப் பழக்கம் இல்லையே' என்று அரசி கேட்டாள்.

'எல்லாம் உங்களுடைய தவறு. வீண்பெருமை. அவனை ஒரு சோம்பேறியாக மாற்றிவிட்டீர்கள்,' என்று தேவதை கூறிற்று. சங்கரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. கையினால் வாயை மூடிக் கொண்டான்.

'நான் வெளியூருக்குப் போக முடியாது. இந்தத் தேவதைக்கு வேறு வேலை கிடையாது போலிருக்கிறது' என்று சங்கரன் சொன்னான்.

'போதும்; வாயை மூடிக்கொள்' என்று அந்தப் பொல்லாத தேவதை கூறிற்று. 'உன்னைப் பேசமுடியாமல் ஆக்கிவிடுகிறேன்' என்று மந்திரக் கோலால் அவனைத் தீண்டிற்று. உடனே சங்கரன் ஒரு குருவியாக மாறிவிட்டான்.

அரசனும் அரசியும் மிகவும் வருத்தமடைந்தனர். குருவியை எடுத்து முத்தம் கொடுத்தனர். தேவதைக்கு அதுகூடப் பிடிக்கவில்லை.

'பறந்து ஓடிப்போய்விடு, நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம்' என்றாள்.

நல்ல தேவதை அரண்மனை வாசலில் எட்டிப் பார்த்தது. அந்தக் குருவியைப் பிடித்துக் கூட்டில் அடைத்து கங்கை இருக்கும் இடத்திற்கு எடுத்துச் சென்றது.

'இந்தக் குருவியை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கூண்டைத் திறந்தால் பறந்து ஓடிவிடும். ஏமாந்து விடாதே' என்று எச்சரிக்கை செய்தது.

சங்கரன் குருவியாக மாறியதால் வருத்த முற்ருன். ஆனால் கங்கையுடன் வந்து சேர்ந்ததால் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

குருவி கூண்டைவிட்டு வெளியில் வருவதற்கு முயற்சி செய்தது. இறக்கைகளை அடித்துக்கொண்டது. கங்கையின் அருகில் போகவேண்டும் என்று ஆசைப்பட்டது. கங்கைக்கும் குருவியின் மேல் ஆசைதான். ஆனால் தன் விளையாட்டுத் தோழன் குருவியாக மாறினது அவளுக்குத் தெரியாது.

'சிட்டுக்குருவி சிட்டுக்குருவி! நீ எவ்வளவு அழகாக இருக்கிருய்' என்று அதனிடம் கொஞ்சினுள். தீனி போடலாம் என்று எடுத்துக் கொண்டு வந்தாள். அதற்குள் குருவி உறங்கி விட்டது.

நன்ருக உறங்கிக்கொண்டிருந்தது. அதை எழுப்புவதற்குக் கூண்டைத்

தட்டினாள். கூண்டின் கதவைத் திறந்து பார்த்தாள். குருவி உறங்கிக்கொண்டே இருந்தது. மறுபடியும் கதவை அடைத்து விட்டாள்.

'உறங்கிக் கொண்டிருக்கும் பறவை எப்படி ஓடும்!' என்று கதவைத் திறந்து அதைக் கையில் எடுத்தாள். உறங்கு கிறதா அல்லது இறந்து விட்டதா என்று பார்த்தாள். குருவி உடனே அவள் கையிலிருந்து பறந்து போயிற்று. நாற்காலியின்மேல் அமர்ந்து கங்கையை அன்புடன் பார்த்தது. அதைப் பிடித்து விடலாம் என்று கங்கை ஓடிவந்தாள். குருவி தோட்டத்தின் பக்கம் பறந்து சென்றது. கீச்சுக் கீச்சென்று கத்திக் கொண்டு சுற்றிச் சுற்றிவந்தது. 'எங்கே என்னைப் பிடி பார்க்கலாம், பிடிபார்க்கலாம்' என்று அழைப்பது போல் இருந்தது.

கங்கை தோட்டத்திற்கு ஓடி வந்தாள். குருவியை நல்ல வார்த்தை சொல்லித் தந்திரமாக அழைத்துப் பார்த்தாள். அது வரவில்லை. தோட்

டத்திற்கு வெளியில் மெதுவாகப் பறந்து போயிற்று. கங்கையும் அதன் பின்னால் ஓடினாள்.

குருவி ஒரு காட்டிற்குள் சென்றது. கங்கையும் காட்டிற்குள் புகுந்தாள். குருவி ஒரு மரக்கிளைமேல் உட்கார்ந்தது. உடனே அதன் உருவம் மாறியது.

குருவிக்குப்பதிலாக ஓர் அழகிய இளவரசன் மரக்கிளையில் அமர்ந்திருந்தான். இளம் வயதில் தன்னுடன் விளையாடிய சங்கரனே அங்கு வந்திருப்பது அவளுக்குத் தெரிந்தது.

'உண்மையில் நீ சங்கரன் தானா, ஏன் என்னை விட்டுப் பறந்து

போகின்றாய்' என்று அவனைக் கேட்டாள்.

'ஏதோ சாபத்தினால் நமக்குக் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது,' என்று சங்கரன் மரத்தை விட்டு இறங்கி வந்தான்.

இருவரும் உல்லாசமாக நடந்து சென்றனர். காட்டில் கிடைத்த காய் கனிகளைப் பறித்துத் தின்றனர். தங்களுக்கு நேர்ந்த துன்பங்களைப்பற்றிப் பேசிக் கொண்டே வழி நடந்தனர்.

இரவு வந்தது. 'எங்கே போவது? வழிகூடத் தெரியவில்லையே' என்று கங்கை புலம்பினாள்.

சற்றுத் தூரத்தில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. 'மரத்தடியில் உட்கார்ந்து இரு. நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்' என்று சங்கரன் வெளிச்சம் வரும் திசையை நோக்கிச் சென்றான்.

அங்கே ஒரு சிறிய வீடு இருந்தது. வாசற்படியில் ஒரு கிழவி நின்று கொண்டிருந்தாள்.

'நானும் பக்கத்து வீட்டுப் பெண்ணும் வந்திருக்கிறோம். இரவில் தங்குவதற்குக் கொஞ்சம் இடம் வேண்டும்' என்றான்.

கிழவி மேலும் கீழும் பார்த்தாள். 'சோம்பேறிப் பையன். வீட்டில் சொல்லாமல் வந்து விட்டாயா?' என்று கேட்டாள்.

'இல்லை இல்லை. வழிதப்பி வந்து விட்டோம்; காலையில் வீட்டிற்குப் போய்விடுவோம்' என்றான். கங்கையின் அழுகுரல் கேட்டது. உடனே சங்கரன் அவள் இருந்த இடத்திற்கு ஓடினான். அதற்குள் நிலவும் வந்துவிட்டது. யாரோ ஒருவன் கங்கையைத் தூக்கிக் குதிரை மேல் வைத்துக்கொண்டு வேகமாய்ப் போய்விட்டான். சங்கரன் துரத்திக் கொண்டு ஓடினான். குதிரை பாய்ந்து சென்று காட்டில் மறைந்து விட்டது.

சங்கரனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கங்கைக்கு என்ன தீங்கு நேரிடுமோ என்று கவலைப்

பட்டான். அவன் எதிரில் ஒரு தேவதை வந்து நின்றது. சிவப்பு ஆடை அணிந்திருந்தது.

'இளவரசனே, எழுந்திரு. மனம் கலங்கவேண்டா. இந்தப் பாத்திரத்தை வைத்துக்கொள். இதில் உணவு எப்பொழுதும் நிறைந்திருக்கும். எடுக்க எடுக்கக் குறையாது. இந்தச் செம்பில் எப்பொழுதும் தண்ணீர் நிறைந்திருக்கும். இந்த மந்திரக் கோலையும் எடுத்துச் செல். இதைக் கீழே தட்டினால் உடனே நான் வந்து விடுவேன். இந்த நாய் உனக்கு உதவியாக இருக்கும். அதை விட்டுப் பிரியாதே,' என்று சொல்லித் தேவதை மறைந்து விட்டது.

சங்கரன் பொழுது விடியும் வரையில் காத்திருந்தான். விடியற்காலையில் எழுந்து கங்கையைத் தேடிச் சென்றான்.

பகல் முழுவதும் நடந்து மாலையில் ஒரு பட்டினத்திற்கு வந்து சேர்ந்தான். அந்த ஊரை ஆண்டு வந்தவன் ஓர் அரக்கன். அவன் ஒரு பெண்ணைக்

திருடிவந்திருப்பதாக ஊரில் உள்ள வர்கள் பேசிக்கொண்டனர்.

அவள் உயிரோடு இருக்கிருள் என்பது கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். அவளை எப்படி மீட்பது என்று எண்ணிப் பார்த்தான். அரக்கமன்ன னிடம் வேலைக்காரனுக அமர்ந்தான். கங்கையைக் காண்பதற்கு வழி ஒன்றும் தோன்றவில்லை. மந்திரக்கோலை எடுத்துத் தரையில் தட்டினுன். வன தேவதை அவன் எதிரில் தோன்றியது.

'கங்கையை நான் உயிருடன் காண்பேனு?' என்று கேட்டான்.

'அவள் சுகமாக இருக்கிருள். அரக்க மன்னனை மணம் செய்ய மறுத்து விட்டாள். அவளை ஒரு கோட்டையில் சிறை செய்து வைத்திருக்கிருன்', என்று தேவதை சொல்லிற்று.

'அந்தக் கோட்டை எங்கே இருக் கின்றது'? என்று கேட்டான்.

'உன்னுடைய நாய் வழிகாட்டும். உனக்கு வெற்றி உண்டாகும்,' என்று சொல்லிவிட்டு மறைந்தது.

நாய் முன்னால் சென்று அவனுக்கு வழிகாட்டியது. அரக்கனுடைய கோட்டை ஒரு மலைமேல் இருந்தது. அதைச் சுற்றிலும் வீரர்கள் காவல் புரிந்தனர்.

சங்கரன் தேவதையை அழைத்துக் கேட்டான்.

'என்னைக் குருவியாக மாற்றி விடு; நான் அவளிடம் பறந்து செல்கிறேன்,' என்றான்.

'இரண்டு முறை குருவியாக முடியாது. உன்னைக் காற்றாடி ஆக்கி விடுகிறேன். நீ அங்கே போய்ப் பறக்கலாம்' என்று தேவதை அவனைக் காற்றாடியாக மாற்றிவிட்டது.

நாய் கயிற்றை வாயில் பிடித்துக் கொண்டது. சங்கரன் காற்றாடியாகப் பறந்து சென்று கங்கையுடன் பேசினான்.

அரக்க மன்னன் நாய் காற்றாடி விடுவதைக் கண்டான். அவன் அருகில் வந்தவுடன் நாய் வாயில் பிடித்திருந்த கயிற்றை விட்டுவிட்டது. காற்றாடி

மலையின் மேல் மிதந்து சென்றது. நாய் ஓட்டம் பிடித்தது. அரக்கன் ஒரு பெரிய சேனையை அனுப்பிக் கோட்டைக்குக் காவல் வைத்தான்.

காற்றாடி தரையில் வந்து விழுந்தது. சங்கரனுக்கு மனித உருவம் வந்தது. தேவதையை மீண்டும் வரவழைத்தான். அரக்கனுடன் போர் செய்வதற்கு ஒரு பெரிய சேனை வேண்டும் என்றான். ஒரு பெரிய மூங்கிலும் ஒரு கோணிப்பை நிறைய இலந்தைப் பழமும் தேவதை கொடுத்தது! 'நீ, போருக்குச் செல்லலாம்,' என்று சொல்லி மறைந்து விட்டது.

'மூங்கிலையும் பழத்தையும் வைத்துக் கொண்டு ஒரு பெரிய சேனையை எப்படி எதிர்ப்பது?' என்று தயக்கமுற்றான். 'இதுவும் ஒரு நன்மைக்காகவே தேவதை அளித்திருக்கும். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை,' என்று வீரர்களின் பக்கத்தில் சென்றான். போர் வீரர்கள் எல்லாம் குறுகிப்போய்ச் சிறுவர்களாக மாறிவிட்டனர். நான்கு அல்லது ஐந்து

வயதுடைய குழந்தைகளாகக் காட்சி அளித்தனர். அவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

சிரிப்பை அடக்கிக் கொண்டான். கடுகடுத்த முகத்துடன் 'சரண் அடைகிறீர்களா, இந்த மூங்கிலால், அடித்து நொறுக்கட்டுமா?' என்று கேட்டான்.

சிறுவர்கள் எல்லாம் அழுது கொண்டு ஓடத்தொடங்கினர். சங்கரன் அவர்களை ஓட வேண்டாம் என்று இலந்தைப்பழங்களை வாரி இறைத்தான். குழந்தைகள் எல்லாம் அழுவதை நிறுத்திவிட்டு இலந்தைப் பழங்களைப் பொறுக்கித் தின்றனர்.

ஒரு மூட்டை இலந்தைப் பழங்களையும் தின்றுவிட்டுக் குழந்தைகள் எல்லாம் சங்கரனைச் சூழ்ந்து கொண்டன. 'நாங்கள் எல்லோரும் உனக்குத் துணையாக வருகிறோம். யார் வந்தாலும் சரி, ஒரு கை பார்க்கலாம்' என்று சிறுவர்கள் கூறினர்.

உடனே சிறுவர்கள் பழையபடி பெரிய வீரர்கள் ஆகிவிட்டனர். சங்கர

னுடன் சேர்ந்து போருக்கு ஆயத்தமாக இருந்தனர். அரக்க மன்னனுக்கு ஓர் ஆள்கூட கிடையாது. அரக்கன் ஊரை விட்டு ஓட்டம் பிடித்தான்.

சங்கரன் கங்கையைச் சிறையி லிருந்து விடுவித்தான். அந்த ஊருக்கு அவனே அரசன் ஆனான். கங்கையை மணந்துகொண்டான். புதிய அரண் மனை ஒன்று கட்டினான். புது வீட்டில் பெண்ணும் மாப்பிள்ளையும் இன்ப முடன் வாழ்ந்து வந்தனர். வன தேவதை அவர்களைப் பாதுகாத்து வந்தது.

மயில் அரசன்

ஓர் ஊரில் ஓர் அரசனும் அரசியும் இருந்தனர். அரண்மனையில் குழந்தை பிறந்தால் உடனே வனதேவதைகளை வரவழைத்துக் குழந்தையால் நன்மை ஏற்படுமா அல்லது தீமை உண்டாகுமா என்று கேட்பது வழக்கம். அரசிக்கு இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தன. மூன்றாவது பெண் குழந்தை பிறந்தது. அரசி வனதேவதைகளை வரவழைத்தாள்.

குழந்தை அழகாக இருந்தது. அம்மாவின் மடியில் படுத்து உறங்கிக் கொண்டு இருந்தது. வனதேவதைகள்

வந்து சேர்ந்தன. குழந்தையின் அருகில் வந்து பார்த்தன.

'இக் குழந்தையால் அதன் உடன் பிறந்தவர்களுக்குத் துன்பம் வரும். உயிர்ச்சேதம் கூட ஏற்படலாம்' என்று சொல்லித் தேவதைகள் மறைந்து விட்டன.

அதைக் கேட்டு அரசி மிகவும் வருத்தப்பட்டாள். 'ஏன் வருத்தமாக இருக்கிருய்?' என்று அரசன் கேட்டான். அரசி தேவதைகள் சொன்னதைப்பற்றி அரசனிடம் தெரிவித்தாள்.

இளவரசர்களுக்குத் தீங்குவராமல் பாதுகாக்கவேண்டும். எனக்குப் பின் ஊரை ஆள்வதற்கு மற்ருெர் அரசன் வேண்டும். காட்டில் தவம் செய்யும் முனிவரைப் பார்த்துக் கேட்கலாம். இளவரசர்களைக் காப்பாற்றுவதற்கு ஏதேனும் ஒரு வழிதேடவேண்டும்' என்று அரசன் கூறிஞன்.

மறுநாள் அரசி ஒரு வெள்ளைக் குதிரைமேல் ஏறிக் காட்டிற்குச்

சென்றாள். இரண்டு காவலாளர்கள் அவளுக்குத் துணையாகச் சென்றனர். முனிவர் ஒரு மரத்தின் பொந்தில் வசித்திருந்தார். அரசி குதிரையை விட்டு இறங்கி முனிவர் இருக்கும் இடத்திற்குச் சென்றாள்.

முனிவர் அரசியிடம் என்ன வேண்டும் என்று கேட்டார். அரசி நடந்ததை முனிவரிடம் சொன்னாள்.

'இளவரசர்களைக் காப்பாற்றுவது எப்படி?' என்று கேட்டாள்.

'வருவது வந்தே தீரும்; அதைத் தவிர்க்க முடியாது. ஒரு கோபுரம் கட்டி இளவரசியை அதன் உச்சியில் வைத்து விடுங்கள். சுற்றிலும் காவல் வைக்க வேண்டும்,' என்று முனிவர் கூறினார்.

ஒரு பெரிய கோபுரம் கட்டப்பட்டது. அதன் உச்சியிலுள்ள ஓர் அறையில் இளவரசி வசித்து வந்தாள். அவள் வெளியில் வருவதில்லை. அரசனும் அரசியும் இளவரசர்களும் ஒவ்வொரு நாளும் வந்து இளவரசியைப் பார்ப்பது வழக்கம்.

இளவரசி பெரிய பெண் ஆனாள். சில ஆண்டுகளில் அரசனும் அரசியும் இறந்துவிட்டனர். பெரிய மகன் பட்டத்திற்கு வந்தான். அரசன் ஆனவுடன் தங்கையைப் பார்க்கச் சென்றான்.

'நீ இப்பொழுது அரசனாகி விட்டாய். உன் விருப்பம்போல் எதையும் செய்யலாம். இந்தச் சிறையிலிருந்து என்னை விடுதலை செய்யமாட்டாயா?' என்று கண்ணீர்விட்டுக் கேட்டாள்.

அழவேண்டாம் என்று அரசன் தங்கையைத் தேற்றினான். அவளை ஒரு பெரிய அரண்மனையில் கொண்டுபோய் வைத்தான். அங்குள்ள பெரிய அறைகளையும் தோட்டங்களையும் கண்டு வியப்புற்றாள். அழகிய காட்சிகளைக் கண்டு ஆனந்தம் அடைந்தாள்.

தோட்டத்தில் ஒரு மயில் தோகையை விரித்து ஆடிக்கொண்டு இருந்தது. அதை அண்ணனிடம் காண்பித்தாள். 'எவ்வளவு அற்புதமாக ஆடுகின்றது! நான் மணம் செய்து

கொள்வதாக இருந்தால் மயில்களின் அரசனைத்தான் மணம் செய்து கொள்வேன்,' என்றாள்!

'மயில்களின் அரசனை எங்கே போய்த் தேடுவது?' என்று அரசன் கேட்டான்.

'தேடிக் கண்டுபிடிக்க வேண்டியது உன் வேலை; நான் வேறு யாரையும் மணந்து கொள்ளமாட்டேன்,' என்று சொல்லிவிட்டாள்.

இரண்டு அண்ணன்களும் தங்கைக்காக மாப்பிள்ளை தேடி அலைந்தனர். 'மயில்களின் அரசன் இருக்கும் இடம்

எங்கே?' என்று வழிப்போக்கர்களிடம் எல்லாம் கேட்டனர்.

மயிலரசனைப்பற்றி யாரும் கேட்டதும் இல்லை, கண்டதும் இல்லை. கடற்கரை ஓரத்தில் ஒரு கருடன் வட்ட மிட்டுக்கொண்டு இருந்தது. 'மயிலரசன் இருக்கும் இடம் உனக்குத் தெரியுமா?' என்று கருடனிடம் கேட்டனர்.

கருடன் மணலில் படம் வரைந்து காட்டியது.

'மயிலரசனுடைய ஊர் கடலுக்கு அப்பால் இருக்கிறது. ஆயிரக்கணக்கான மைல்கள் செல்லவேண்டும்,' என்று சொல்லிவிட்டுப் பறந்து போயிற்று.

இருவரும் கப்பலில் ஏறிக் கடலைக் கடந்து சென்றனர். மயிலரசனுடைய நாட்டிற்கு வந்து சேர்ந்தனர். கடற்கரையில் மயில்கள் கூட்டம் கூட்டமாக இருந்தன. அவ்வூரிலுள்ள மக்கள் எல்லாம் மயில் இறகினால் ஆகிய ஆடைகளை அணிந்திருந்தனர்.

மயிலரசன் தேரில் அமர்ந்து வீதி வழியாகச் சென்றான். அரசனும் மயில் இறகினால் செய்த ஆடைகளை அணிந்திருந்தான். அவன் தலையிலுள்ள மகுடமும் மயில் இறகினால் செய்யப்பட்டிருந்தது. பொன்னால் ஆகிய தேரில் அழகாக வீற்றிருந்தான். பன்னிரண்டு மயில்கள் தேரை இழுத்துச் சென்றன.

'நம் தங்கைக்கு ஏற்ற கணவன் தான். இவருக்கே மணம் முடிக்க வேண்டும்,' என்று இளவரசன் கூறினான்.

மயிலரசன் தேரை நிறுத்தினான்.

"நீங்கள் யார்? எந்த ஊரிலிருந்து வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டான்.

'நாங்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிறோம். இந்தப் படத்தை உம்மிடம் காண்பிக்கலாம் என்று வந்தோம்,' என்று தங்கையின் படத்தை மயிலரசனிடம் காண்பித்தனர்.

'மிகவும் அழகிய பெண்தான். இப்படிப்பட்ட அழகி உலகில் வேறெங்

கும் காண முடியாது' என்று மயிலரசன் கூறினான்.

'எங்கள் தங்கையின் அழகை வர்ணிக்க முடியாது. அவளுடைய முழு அழகும் படத்தில் தெரியாது. தாங்கள் விரும்பினால் அவளை மணம் செய்து கொள்ளலாம், என்று தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர்.

மயிலரசன் திருமணத்திற்கு உடன் பட்டான். உடனே புறப்பட்டு வரும்படி தங்கைக்குக் கடிதம் எழுதினர். மயிலரசனும் மற்றவர்களும் அவளுடைய வருகைக்கு எதிர்நோக்கி இருப்பதாகவும் எழுதி இருந்தனர்.

இளவரசி கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். பெருமகிழ்ச்சி அடைந்தாள். தாமதமின்றிப் புறப்பட்டாள். தாதியும் தாதியின் மகளும் அவளுக்குத் துணையாக வந்தனர். ஒரு பெட்டி நிறையப் பொற்காசுகளையும் தன்னுடன் கொண்டுவந்தாள். அவளுடைய நாயும் துணைக்கு வந்தது.

கப்பல் நடுக்கடலில் போய்க்கொண் டிருந்தது. இளவரசி நன்ருக உறங்கி விட்டாள். தாதி மிகவும் பொல்லா தவள். 'என்னுடைய பெண்ணை மயிலரசனுக்குக் கட்டிவைத்தால் என்ன?' என்று எண்ணம் கொண்டாள். இளவரசி உறங்கும் சமயம் பார்த்துக் கப்பலோட்டிகளை அணுகினுள்.

'நீங்கள் பணக்காரர்கள் ஆக வேண்டுமா ?' என்று கேட்டாள். 'ஆம், எங்களுக்குப் பணம்தான் வேண்டும்,' என்றனர்.

'இளவரசி உறங்கிக்கொண்டு இருக்கின்ருள். அவளைத் தூக்கிக் கடலில் போட்டுவிடுங்கள். என் மகளுக்கு அரசியின் ஆடையை அணி வித்து மயிலரசனுக்குக் கொடுத்து விடலாம். இதற்கு நீங்கள் உதவி செய்தால் உங்களுக்கு ஏராளமாகப் பணம் கொடுக்கிறேன். எவ்வளவு பொன் வேண்டுமானுலும் தருகிறேன்,' என்ருள்.

பணத்தாசை பிடித்த கப்பலோட்டிகள் இருவரும் அதற்கு ஒப்புக்கொண்டனர். இளவரசியைப் படுக்கையோடு தூக்கிக் கடலில் போட்டனர். இளவரசி உறங்கிக்கொண்டே இருந்தாள். அதிர்ஷ்டவசமாகப் படுக்கை கடலில் மிதந்து சென்றது.

தாதி தன் மகளுக்கு இளவரசியின் ஆடைகளை அணிவித்தாள். நகைகளைப் பூட்டினாள். தனக்கு இல்லாத அழகு தண்ணீரைப் பார்த்தால் வருமா? சப்பை மூக்கும் கோணல் வாயும் பூனைக் கண்ணும் அவள் அழகைக் கெடுத்து விட்டன.

கப்பல் கரைக்கு வந்து சேர்ந்தது. மயிலரசன் மணப் பெண்ணை அழைத்து வரத் தன்னுடைய தேரையே அனுப்பி இருந்தான். தாதியின் மகள் முக்காடு போட்டிருந்தாள். அதனால் அவளுடைய முகம் தெரியவில்லை. அரசன் முன்னால் அழைத்துச் சென்றனர். முகத்தை மறைக்கும் துணி சற்று விலகிற்று. அரசன் அவள் முகத்தைப் பார்த்தான்.

கடுங்கோபம் கொண்டான். அந்த இடத்தைவிட்டு அகன்ருன்.

'அந்தத் திருட்டுப் பயல்கள் எங்கே? என்னை அவமானப்படுத்துவதற்கு இந்த ஏற்பாடு செய்திருக்கிருர்கள் போலிருக்கிறது. அவர்களுக்கு நல்ல பாடம் கற்றுக்கொடுக்கிறேன். இந்தப் பெண்ணைக் கொண்டுபோய்ச் சிறையில் தள்ளுங்கள். அவள் முகத்திலேயே விழிக்கமாட்டேன்,' என்று உத்தர விட்டான்.

இரண்டு இளவரசர்களும் தங்கை எப்பொழுது வருவாள் என்று எதிர் பார்த்துக்கொண்டு இருந்தனர். அவர் களையும் மயிலரசன் பிடித்து இருட்டுக் குகையில் அடைத்துவைத்தான்.

'நாங்கள் என்ன குற்றம் செய்தோம்?' என்று காவலாளிகளிடம் கேட்டனர். அவர்கள் பதில் ஒன்றும் சொல்லவில்லை. கதவை அடைத்துப் பூட்டிவிட்டனர். மூன்று நாட்கள் வரையில் அங்கேயே அடைபட்டுக் கிடந்தனர். அரசனுக்கு ஏன் கோபம்

வந்தது என்று அவர்களுக்குத் தெரியவில்லை.

கடல் மீன்கள் அரசியைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவளுடன் உறங்கிக் கொண்டிருந்த நாயும் விழித்துக் கொண்டது. மீன்களைப் பார்த்துக் குலைத்தது. இளவரசி விழித்துப் பார்த்தாள். கப்பல் போன இடம் தெரியவில்லை. கப்பலோட்டிகளையும் அவளுடன் வந்தவர்களையும் காணும். கப்பல் ஒருவேளை பாறையில் மோதி உடைந்துவிட்டதோ என்று எண்ணினாள். இரண்டு நாட்கள் வரை தண்ணீரிலேயே மிதந்துகொண்டு இருந்தாள். குளிரில் நடுங்கினாள். பசியால் வாடினாள். நாய் அவள் அருகிலேயே இருந்தது. அவளுக்கு உறக்கம் வரும்போது 'நாய்க்குட்டி நாய்க்குட்டி! மீன் கடிக்காமல் பார்த்துக் கொள்' என்று சொல்லிவிடுவாள். மீன்கள் எல்லாம் வாயைத் திறந்து கொண்டு அவளிடம் வந்தன. நாய்க்குட்டி அவைகளை விரட்டிவிடும்.

மூன்ருவது நாள் காலையில் படுக்கை மிதந்து வந்து கரையில் ஒதுங்கிற்று. கடற்கரையில் ஓர் ஏழைக் கிழவன் ஒரு குடிசையில் வசித்திருந்தான். அவன் மிகவும் நல்லவன். நாய் குலைக்கும் ஓசையைக் கேட்டு வெளியில் வந்து எட்டிப்பார்த்தான். இளவரசியும் நாயும் கடலில் மிதப்பதைக் கண்டான்.

இளவரசியும் அந்தக் கிழவனைப் பார்த்தாள்.

"என்னைக் காப்பாற்றுங்கள், தண்ணீரில் முழுகிவிடுவேன்,' என்று கதறிஞள்.

கிழவன் ஓடிவந்து படுக்கையைத் தண்ணீருக்கு வெளியில் கொண்டு வந்தான். இளவரசியைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்ருன். இறந்துபோன மனைவியின் புடைவையை எடுத்து இளவரசியிடம் கொடுத்தான்.

அவன் கொடுத்த 'புடைவையை உடுத்திக்கொண்டு ஈரத் துணிகளை உலர வைத்தாள். இளவரசி ஒரு குடியானப்

பெண்ணைப்போல் புடைவை கட்டி இருந்தாள். கிழவன் அவளுக்குச் சிறிது உணவு சமைத்துக் கொடுத்தான். நாய்க்கும் சாப்பாடு கிடைத்தது.

'உங்களைப் பார்த்தால் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலிருக்கிறது. இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்?' என்று கிழவன் கேட்டான். இளவரசி தன் கதையைச் சொன்னாள். 'மயிலரசனை மணந்துகொள்ளப் போகும் வழியில் இத்துன்பம் நேரிட்டது,' என்றாள்.

'மயிலரசனுடைய அரண்மனை நெடுந்தூரத்தில் இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் அங்கே போகலாம்,' என்றான்.

'ஒரு வேளை என்னைக் கடலில் தள்ளியது அவருடைய வேலையாக இருக்கலாம். என்னைக் கொன்று விட்டால் என்ன செய்வது? நான் இங்கேயே இருக்கிறேன்,' என்றாள்.

'இளவரசிக்கு ஏற்ற உணவு என்னிடம் இல்லை. மற்ற வசதிகளும்

இல்லை. என்ன செய்வது?' என்று கிழவன் வருத்தப்பட்டான்.

'ஒரு சிறிய கூடை இருந்தால் நான் நல்ல சாப்பாடு வரவழைத்துக் கொடுக்கிறேன்' என்று இளவரசி கூறினாள். கிழவன் ஒரு சிறிய கூடையைக் கொண்டுவந்து கொடுத்தான். இளவரசி அதை வாங்கி நாயின் கழுத்தில் கட்டிவிட்டாள்.

'நாய்க்குட்டி நாய்க்குட்டி! பட்டணத்திற்குப்போய் நல்ல சாப்பாடு கொண்டுவா,' என்று சொல்லி அனுப்பினாள்.

நாய் நேராக அரண்மனைக்குச் சென்றது. சமையல் அறைக்குள் நுழைந்தது. மயிலரசனுக்காக அருமையான உணவு சமைக்கப்பட்டிருந்தது. கூடை நிறைய எடுத்துப் போட்டுக் கொண்டு இளவரசியிடம் ஓடிவந்தது.

'நல்ல நாய்' என்று இளவரசி அதைத் தட்டிக்கொடுத்தாள். கூடையிலிருந்ததை எடுத்துக்கொண்டு நாயை மறுபடியும் வெளியில் அனுப்பினாள்.

அது அரண்மனைக்குச் சென்று கூடை நிறையப் பலகாரங்களை எடுத்துக் கொண்டு வந்தது.

மயிலரசனுடைய சாப்பாடு முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக இளவரசியிடம் வந்து சேர்ந்துவிட்டது. அன்று அவர் அரைகுறையாக உணவு அருந்தினர். அவருக்குக் கோபம் வந்தது. 'இரவு சாப்பாடாவது நன்ருகச் செய்து வையுங்கள்,' என்று உத்தரவிட்டார்.

பொழுது சாய்ந்ததும் இளவரசி நாயை அனுப்பினுள். நாய் மீண்டும் அரண்மனைக்குச் சென்றது. அவ்வளவு நல்ல சாப்பாடு வேறு எங்கே கிடைக்கும்? நாய் கிடைத்தவரையில் எடுத்துக் கூடையில் போட்டுக்கொண்டு ஓட்டம் பிடித்தது.

அரசன் சாப்பிட வந்துவிட்டான். அவனுக்கு வேண்டிய உணவு கிடைக்கவில்லை. கடுங்கோபம் கொண்டான். மறுநாளும் அப்படியே நடந்தது. நாய்க்குட்டி சமயம் பார்த்து உள்ளே நுழைந்து அரசனுடைய உணவை

எடுத்துச் சென்றுவிடும். சமையல்காரன் அன்று மாலை மறைந்து நின்று பார்த்தான். நாய் வந்து உணவைக் கூடையில் எடுத்துச் சென்றது. அதைப் பின் தொடர்ந்து சென்றான். அது கடற்கரையிலுள்ள குடிசைக்குள் சென்றது. சமையல்காரன் ஓடிச் சென்று அரசனிடம் தெரிவித்தான். அரசனுக்கு இது வேடிக்கையாக இருந்தது. நேரில் சென்று பார்க்கலாம் என்று புறப்பட்டான்.

அவனுடன் பன்னிரண்டு வீரர்கள் சென்றனர். அரசன் குடிசைக்குள் நுழைந்தான். இளவரசியும் கிழவனும் உணவு அருந்திக்கொண்டு இருந்தனர்.

'கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டீர்கள். நீங்களும் நாளைக்குச் சாகவேண்டியதுதான். என்னை ஏமாற்றிய இரண்டு மனிதர்கள் ஒன்றாக நாளைக்கு மடியப்போகிறார்கள்' என்று சொல்லி, 'இவர்கள் இருவரையும் கட்டி உருட்டி அரண்மனைக்குக் கொண்டு வாருங்கள்' என்று வீரர்களுக்கு உத்தரவிட்டான்.

இளவரசி அரசனுக்கு நேராக உட்காராமல் திரும்பியிருந்ததால் அரசன் அவள் முகத்தைப் பார்க்கவில்லை.

'இந்தக் கிழவர் பேரில் ஒரு குற்றமும் இல்லை,' என்று சொல்லிக்கொண்டு அரசன் இருக்கும் பக்கத்தில் முகத்தைத் திருப்பினுள். அரசன் அவளை உற்று நோக்கினுன். அவள் மிக அழகாய் இருப்பதைக் கண்டான். இளவரசர்கள் கொண்டுவந்த படத்தைப் போலவே இருந்தாள். 'நீ யார்?' என்று கேட்டான்.

'நீங்கள் தேடும் இளவரசி நான் தான். இங்கே வந்து சேரும்படி கடிதம் வந்தது. எப்படியோ கடலில் விழுந்து விட்டேன். இந்தக் கிழவர்தாம் என்னைக் காப்பாற்றினுர்,' என்ருள்.

'மணப்பெண் வந்துவிட்டாள். அழகுக்கு அரசி வந்துவிட்டாள்,' என்று அரசன் கூத்தாடினுன்.

'என் உடன்பிறந்தோர் எங்கே?' என்று இளவரசி கேட்டாள்.

'நான் தெரியாமல் அவர்களைச் சிறையில் வைத்துவிட்டேன். அவர்களை

உடனே விடுதலை செய்யவேண்டும். வா போகலாம்,' என்று இளவரசியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

இளவரசர்கள் சிறைச் சாலையிலிருந்து வந்து சேர்ந்தனர். இளவரசி அவர்களைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தாள். தாதியையும் அவள் மகளையும் அரசனுக்கு எதிரில் கொண்டு வந்து நிறுத்தினர். அவர்களும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அப்பொழுதுதான் தாதியின் திருட்டுத்தனம் இளவரசிக்குத் தெரிந்தது.

இளவரசியின் வேண்டுகோளின்படி அரசன் தாதிக்கு மன்னிப்புக் கொடுத்தான். கடற்கரையில் வசிக்கும் கிழவனுக்கு நாள்தோறும் அரண்மனையிலிருந்து நல்ல சாப்பாடு அனுப்பப் பட்டது. அவனுக்குப் பல வெகுமதிகள் வழங்கப்பட்டன.

மயிலரசன் இளவரசியை மணந்து கொண்டான். இருவரும் இன்பமுடன் வாழ்ந்து வந்தனர்.